# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 35 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 35



## இருளினின்று அழைக்கப்படுதல்

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் – 1 பேதுரு 2 : 9

தேவனுடைய சிம்மாசனத்தின் நாட்கள் துவங்கி நம்முடைய இந்த காலத்தின் சந்ததியினர் வரையும் தேவனுடைய வார்த்தை எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது. அநீதியான இந்த உலக சிற்றின்பங்களாகிய இருளின் ஆதிக்கத்தை விட்டு விலகி, தெய்வீக அழைப்புக்கு ஒப்புக்கொடுத்து சத்தியமும் நீதியும் ஆன ஒளியின் வழியில் நடக்க விருப்பம் கொள்வோம். இன்றைய காலகட்டத்தில் ஜனங்கள் மாம்சீக இச்சைகளால் இழுப்புண்டு விபச்சாரம், வேசித்தனம், ஓரினச்சேர்க்கை, அசுத்தம், விக்கிரக ஆராதனை, வெறுப்பு, போட்டி, பொறாமை, கொலை பாதகங்கள், குடியும் வெறியும் என்று தீமைகள் நீண்டுகொண்டே செல்கிறது. ஆவிக்குரிய இருள் ஜனங்களிடத்தில் பரவியபோது தேவன் அவர்களை வெறுத்தார். அதினிமித்தம் மாம்ச இச்சைகளுக்கு ஜனங்கள் அடிமையானார்கள். இப்படிப்பட்ட வைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் (கலா 5 : 19 –21).

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் இருதயத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள். அசுத்தமான பாவ இச்சைகளுக்கு அடிமையாகி வாழ்ந்துவரும் ஜனங்கள் தேவனுடைய ஆவியானவரால் குற்ற உணர்வு மனசாட்சியை தொடும் போது வெளிப்படும் உணர்வின் உள்ளான ஒரு குரலை அடக்கி, உண்மையான சத்தியத்தை புறக்கணித்து விட்டு பாவத்தை அனுமதிக்கும் அளவிற்கு தேவனுடைய சத்தியத்தை புரட்டி அதை தங்களுக்கு சாதகமாக மாற்றி , இவ்வாறாக பாவமானது இருதய சீர்கேடு மிகுந்ததாக மாறி வருகிறது.

மனுஷனுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயி ருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள் (யோவான் 3 : 19). மாம்ச அடிமைத்தனம் , தீமைகள் எங்கும் பரவலாக காணப்படுவதாலும், ஆழமான இருளுக்குள் ஜனங்கள் வாசமாயிருப்பதாலும் நல்லொழுக்கங்களுக்கு இழுக்கு நேர்ந்து விட்டது. சில ஜனங்கள் பல பாவங்களை மேற்கொண்டு ஜெயித்தாலும் செல்வம், பண ஆசை, பேராசை இவைகளில் சிக்கி விடுகிறார்கள்.



ஆவிக்குரிய அந்தகாரமானது எல்லாவிதத்திலும் நம்மை தேவனிடத்தில் இருந்து பிரித்து விடுகிறது. பாவத்தின் சம்பளம் மரணம். ஒளி இல்லாத சூழலே இருள். உள்ளார்ந்த மனிதனை ஆவிக்குரிய இருளின் பாவ சந்தோஷத்தை தந்து தேவனிடத்தில் இருந்து பிரிப்பது. அது ஒரு மனிதனை மாம்ச ரீதியாகவும், மன ரீதியாகவும், உணர்வு பூர்வமாகவும் ஆவிக்குரிய செயலையும் பாதிக்கிறது.

**ஒளி இல்லாத சூழலே இருள். ஆவிக்குரிய காரியத்தில் தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறது.**

பாவ செயல்பாடுகளும் அரசியல், சினிமா, விளையாட்டு, சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள் வாயிலாக சமுதாயத்தில் பரவி ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையையும் குடும்பத்தையும் பாதிக்கிறது.

பாவம் நிறைந்த வாழ்க்கை முறைகளும், சித்தாந்தங்களும் பெரிதான மகிழ்ச்சியையும் சமுதாயத்தில் திருப்தியையும் தர முடியாது. மாறாக அவைகள் தனிமையையும் நம்பிக்கையற்ற நிலையையும் சடுதி மரணங்களையும் கொண்டு வந்து மனிதனை ஏக்கத்திற்குள்ளாக்குகிறது. இயேசு கிறிஸ்துவின் வல்லமையால் பாவத்தையும் அந்தகார கிரியை களையும் ஜெயிக்க பெலன் தந்த தேவனுக்கு நன்றி. அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்;


| தலையங்கம் | இந்த உலகத்திற்குரியவர்களல்ல | இந்த உலகத்திற்குரியதல்ல | பரிசுத்தத்திற்கென்று அழைக்கப்படுதல் | உங்களுக்கு தெரியுமா? நீதியை பிரசங்கித்தவன் |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5-6 | 7 | 8 |

# வேதாகமம், நமக்கு போதிப்பது என்ன..... ?



**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1 : 7). இருளின் அந்தகாரத்தினின்று நீங்கி தம்முடைய ஆச்சரியமான ஒளியின் இடத்திற்கு வரவழைத்தார் இருளை விரட்டும் ஒளி, இயேசு கிறிஸ்துவின் ஒளியின் வல்லமை ஆத்துமாவின் பாவத்தை நம்மை விட்டு அகற்றும். இருளிலேய நடக்கும் ஜனங்கள் மாம்சத்தின் வல்லமையையும் தேவனுடைய வெளிச்சத்தில் நடக்கும் தேவ பிள்ளைகள் சமாதானத்தையும் அடைவார்கள் . மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்,



என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார் (யோவான் 8 : 12) . என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் (யோவான் 12: 46) . கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள் (எபேசி 5 : 8-11) . ஒருவர் கிறிஸ்துவை முழு இருதயத்தோடு பாவம் கழுவப்பட்டு தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் கிறிஸ்துவின் ஒளியானது அவருடைய வாழ்வை மாற்றும்.

**கொஞ்சம் இருளையும் கொஞ்சம் வெளிச்சத்தையும் வாழ்வில் அனுமதிக்க தூண்டுவது சாத்தானின் பொய்யான தந்திரம்**

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரி 5 : 17). இனி பொய்யில்லை, ஏமாற்றுதல் இல்லை, ஆரம்பமும் இல்லை, ஏசு கிறிஸ்துவின் ஒளி ஆவியின் கனியாகிய சமாதானம் சந்தோஷம் சாந்தம் இவை அனைத்தையும் நமக்குத் தருகிறது (கலாத்தியர் 5: 22- 25). ஆவியின் கனிகளை பெற்ற ஒருவர் மாம்சத்தின் வழியில் நடக்க மாட்டார் பிரியமானவர்களே , அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி இருக்கக் கடவோம் (1 பேதுரு 2 : 11) . நாம் இவ்வுலகத்தில் இருந்து பிரிக்கப்பட்டு பரிசுத்தத்தில் பங்கடைவோம். இருளின் அந்தகாரத்தில் இருந்து விடுதலையாகி, மெய்யான சமாதானமும், மீட்பும் அடைவோம். கர்த்தருடைய வெளிச்சத்திலே நடக்கும்போது மெய்யாய் விளங்குகிறது (1 யோவான் 1 : 5-6) . மாம்சத்திற்கு உட்பட்டவர்கள் தேவனுக்கு பிரியமாக இருக்கமாட்டார்கள் (ரோமர் 8: 5- 8) .நீங்கள் அந்தகாரத்திலேயே வாழ்வீர்களானால், உங்கள் இருதயத்தை தேவனுடைய வழிக்கு நேராய் திருப்பி, வாழ்வின் உண்மையான ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# Editorial ஆசிரியரின் தலையங்கம்

“ யாக்கோபின் வம்சத்தாரே, கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள் ”
– ஏசாயா 2 : 5

உலகம் இருளில் ஆதிக்கத்திலும் பாவச் செய்கையிலும் வளரும்போது தேவனுக்கும் மனுஷனுக்கும் உள்ள இடைவெளி அதிகமாகிக்கொண்டே போகிறது.துன்மார்க்கரும், அக்கிரமக்காரரும் ஏகமாய் சூழ்ந்துள்ள உலகில் தேவனுடைய சத்தியத்தில் நடக்கும் தேவ பிள்ளைகளின் வெளிச்சம் பிரகாசித்துக் கொண்டே செல்கிறது. ஆகவேதான் ஏசாயா தீர்க்கதரிசி பழைய ஏற்பாட்டு ஜனங்களை பார்த்து, “ வாருங்கள் கர்த்தரின் வெளிச்சத்திலேயே நடப்போம் ” என்கிறார்

இந்த இதழின் தலைப்பு இந்த “ உலகத்திற்குரியதல்ல ” தேவனுடைய பரிசுத்தத்தில் வாழும் ஜனங்களுக்கு உலகத்தை வெறுப்பது ஒரு பெரிய காரியம் அல்ல. ஏனெனில் பழைய மற்றும் புதிய உடன்படிக்கை இரண்டின் தலையாய காரியம் பரிசுத்தம். ஆனால் இப்போது பரிசுத்தத்தை தாண்டி, சமுதாயத்தை சார்ந்து, சுவிசேஷத்தை தங்களுக்கு ஏற்றாற்போல் மாற்றி பிரசங்கித்து வரும் அநேக போதகர்களும் போதகத் தலைவர்களும் நம்முடைய இந்த நாட்களில் பெருகி வருகிறார்கள்.நம் தேவசபையிலும் கூட உலகத்தை பிரியப்படுத்தி வாழ்பவர்களே அதிகம். சத்தியம் என்றும் மாறாது. பரிசுத்தமே முக்கியம். பரலோகத்தை நம் சொந்தமாக்கவும், தேவனைப் பிரியப்படுத்தவும் விரும்பினால் பரிசுத்தமாய் வாழ பழகிக்கொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் தூதர்களாகிய அநேக பரிசுத்தவான்கள் அவர்களுடைய வாழ்வில் பரிசுத்தத்தை நமக்கு முன்மாதிரியாக வைத்துள்ளார்கள். புறம்பான அலங்கரிப்பை விட பரிசுத்தமே மேலானது.

உண்மையான அர்ப்பணிப்போடு வாழும் தேவ பிள்ளைகள் உலக இச்சைகளை வெறுப்பார்கள். பரிசுத்தம் என்பது இருதயம் சார்ந்த ஒரு காரியம். அநேகம் ஆயிரம் ஜனங்களுடைய இருதயம் தேவனண்டையிலே வழிநடத்தப்பட என் உள்ளம் ஏங்குகிறது. எனக்கு பிரியமானவர்களே, கர்த்தருக்காக வாழ்வது என்பது உலகத்தை விட்டு திரும்பி தேவனண்டையில் நிற்பது, “ இயேசுவை பின்பற்ற உலகத்தை விட்டு விட்டேன் ” என்கிற பாடல் வரிக்கேற்ப வாழ்வோம்.

நம்முடைய இளைஞர்கள் வாழ்வில் கல்வி, கலாச்சாரம், எதிர்காலம், திருமணம், உடுத்தும் உடை, என எல்லாவற்றிலும் தேர்ந்தெடுக்க பழகியவர்கள். இவையெல்லாம் உலகத்தை சார்ந்து முடிவெடுக்கிறார்கள். இந்த உலக செல்வமும், ஆஸ்தியும் பரிசுத்த தேவனுக்கு பிரயோஜனம் இல்லாதது. அதைக்கொண்டு இப்போதும் வரப்போகும் வாழ்விலும் மெய்யான சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது. ஆவிக்குரிய காரியங்களுக்கு நம் நேரத்தை செலவிடும் போது நமக்கும் நம்மை சுற்றி உள்ளவர்களுக்கும் வரும் மெய்யான சமாதானத்தை உணரலாம்.

தேவனுக்கு உண்மையாய் வாழ்பவர்கள் இந்த சந்ததியாரிலும் கொஞ்ச பேர் தான். நாம் பரிசுத்த வாழ்வு வாழும் போது உலகத்தினின்று வேறு பிரிக்கப்பட்ட பேச்சு, நடை, உடை எல்லாவற்றிலும் மாற்றம் உண்டாகும். நாம் பரிசுத்த பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்தும் விதமாய் நம் செயல்பாடுகள் இருக்க வேண்டும். பலருக்கு தேவ சத்தியத்தை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. நம் வாழ்வு உலகத்தால் தீர்மானிக்கப்பட கூடாது .மாறாக தேவனுக்காய் வாழும் பரிசுத்தத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும். தேவ பிள்ளையே நாம் இந்த உலகத்திற்காக நிச்சயக்கப்பட்டவர்கள் அல்ல . பரிசுத்தத்தை மேற்கோள்காட்டி பரிபூரணமாக தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்போம் உலகத்தை நேசிக்கும் எந்த இச்சைகளுக்கும் உடன்படாது, நம் ஆத்துமாவை காத்துக் கொள்ளவேண்டும். பரலோக சிந்தை கொண்டு பரிசுத்த தேவனை துதிப்போம்.

**உண்மையான அர்ப்பணிப்பு என்பது உலகமும் அதின் ஆசை இச்சைகளையும் வெறுத்து தேவனுக்கு பிரியமாய் வாழ்வது. பரிசுத்தம் என்பது இருதயம் சார்ந்த ஒரு காரியம்.**

WWW

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*

பதிவுசெய்து
வெளியீட்டு காப்பகங்களுக்குள்
உள்நுழைக

# வேதபாட வழிகாட்டி

## பொருள் : இந்த உலகத்திற்குரியவர்களல்ல

**வேத வாசிப்பு :** நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல - யோவான் 17 : 14-16

**செய்திச் சுருக்கம் :** கிறிஸ்தவர்களாகிய நாம் இருளுக்கும் இந்த உலகத்திற்கும் உள்ளானவர்கள் அல்லவே கிறிஸ்துவின் வெளிச்சத்திலேயே பரிசுத்த வாழ்வில் பங்கு அடைவோம். அனுதின வாழ்வின் எல்லா காரியங்களிலும் தேவனை மகிமைப்படுத்தும் விதமாய் உலகத்தின் ஆசை இச்சைகளினின்று விடுவிக்கப்படுவோம்.



### I.அந்தகாரத்தினின்று அழைக்கப்படுதல்

**A.** 1 பேதுரு 2 : 9 - 11 அந்தகாரத்தினின்று அழைக்கப்படுதல்

**B.** கலா 5 :16- 25 மாம்ச இச்சைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை.

**C.**யோவான் 3 : 19 மனுஷன் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறான்.

**D.** 1 யோவான் 1 : 5-7 இருளில் இருந்த நம்மை இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

**E.**யோவான் 8 : 12 கிறிஸ்துவை பின்பற்றுகிறவன் இருளிலே நடக்க மாட்டான்.

**F.**யோவான் 12 : 46 என்னிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் இருளில் இருப்பதில்லை

**G.**எபேசியர் 5 : 8 -11 முற்காலத்தின் அந்தகார கிரியைகளை கழிந்து கொள்ளுங்கள்.

**H.**2 கொரி 5 : 17 கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் பழையவைகள் ஒழிந்துபோயின.

**I.** ரோமர் 8 : 5 - 8 மாம்ச சிந்தை மரணம்

### II.உலகத்திற்குரியதல்ல

**A.**யோவான் 17 : 14 - 16 இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் உலகத்தாரல்ல

**B.** யோவான் 15 : 18-19 நீங்கள் உலகத்தார் அல்ல ஆகையால் உலகம் உங்களை பகைக்கும்

**C.**1 யோவான் 3 : 1 உலகம் பிதாவை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை

### III.உலகத்திலுள்ளவைகளில் அன்பு கூராதிருங்கள்.

**A.**1 யோவான் 2 : 15 உலகத்திலுள்ளவைகளில் அன்பு கூராதீர்கள்.

**B.**1 யோவான் 2 : 16 உலகத்தில் உள்ளவைகள் எல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல.

**C.** கொலோ 3 : 1-2 பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

### IV.உலகத்தின் வல்லமை

**A.**2 கொரி 4:4 இப்பிரபஞ்சத்தின் தேவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்

**B.**கொலோ 2 : 8 தியானத்தினால் மாயமான தந்திரத்தாலும் ஒருவனும் உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

### V.உலக ஞானம்

**A.**1 கொரி 3 : 18- 19 இவ்வுலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது.

**B.**1 கொரி 1 : 18 - 25 தேவனுடைய பைத்தியம் எனப்படுவது மனுஷனுடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது.

### VI.எச்சரிக்கைகள்

**A.**2 தீமோத்தேயு 2 : 4 தன்னை சேவகம் எழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி பிழைப்புக்கு அடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள மாட்டான்.

**B.**ரோமர் 12: 1 - 2 பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காதிருங்கள்.

**C.**யாக் 4 : 4 உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை

**D.**யாக்1 :27 உலகத்தால் கறைபடாதபடிக்கும் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்

### VII.விளைவுகள்

**A.**மத் 16 : 24 - 26 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

**B.**கலா 6 : 7 - 8 மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

### VIII.பரிசுத்தத்திற்கே அழைக்கப்பட்டீர்கள்

**A.**1 பேது 1 : 15 -16 நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்

**B.**1 கொரி 6 : 18 - 20 உங்கள் சரீரத்திலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள் .


**C.**எபி 12 : 14 பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பது இல்லை

### முடிவு :

இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும் - 2 பேது 3 : 11

# இந்த உலகத்திற்குரியது அல்ல

**இயேசு கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுகிற யாவரும் தங்கள் வாழ்க்கை முறை, நடை, உடை, ஆவி ,ஆத்துமா நடத்தை, எண்ணம், நோக்கம், நற்குணங்கள் இவை யாவற்றிலும் உலகத்தினின்று வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வார்கள். அதேசமயம் பெயர் கிறிஸ்தவர்கள் உலகத்திற்கு ஒத்த வேஷந் தரிப்பதால் தாங்கள் ஆராதிக்கும் தேவனின் சத்தியத்தை மறுதலிக்கிறார்கள்.**



இந்த பூமிக்குரிய தேவாலயங்களில் பெயர் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை சொந்தம் பாராட்டிக் கொண்டு சபைகளில் இருக்கலாம். ஆனால் தெய்வீக சபையாம் பரலோகத்தில் கிறிஸ்துவுக்காய் அர்ப்பணிப்போடு வாழும் தேவ பிள்ளைகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். பூமியில் வாழும் தேவனுடைய பரிசுத்த வான்களைப் போலவே தேவ பிள்ளைகளுக்கும் படிப்பு, வீட்டு வேலை, பணம், பொருட்கள் வாங்குதல், அத்தியாவசிய தேவைகள் என்று அநேக காரியங்கள் உண்டு. ஆயினும் அவர்கள் உலகத்தில் பொக்கிஷங்களை சேர்ப்பதில் கவனம் செலுத்தாமல் தங்களுடைய நேரத்தையும் திறமையையும் அனுதினமும் கர்த்தருக்காய் ஒப்புவிப்பதில் நாட்டங் கொள்கிறார்கள்.

## உலகத்தில் இருப்பவர்கள் ஆனால் உலகத்தார் அல்ல

இயேசு கிறிஸ்து தம் சீஷர்களுக்காய் தம் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்ளும் ஜெபத்தில் ஒரு ஆழமான சத்தியத்தை காணலாம். நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல் நீர் அவர்களை தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்கிறேன் (யோவான் 17 : 15- 16). மாம்சீகமாக உலகத்தினின்று எடுத்து தேவனுடைய பரிசுத்தவான்களை தனியே பிரித்து வைத்து அவர்களோடு மாத்திரம் தொடர்பு கொள்ளும் தேவன் அல்ல அவர். தம்முடைய பிள்ளைகள் இந்த உலகம் முழுவதும் கடந்து செல்லும் போது அவர்களுடைய வெளிச்சம், சத்தியம், உலக மக்கள் முன் பிரகாசிக்கவும், பரிசுத்த வாழ்வு மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவும், தீமையினின்று காக்கப்படவுமே விரும்புகிறார்.

## உலகம் வரையறை

உலகத்தினின்று நாம் வேறுபட்டவர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். உலகம் என்னும் வார்த்தை வேதாகமத்தில் பல்வேறு வழிகளில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

உலகமானது கர்த்தர் சிருஷ்டித்த சிருஷ்டிப்பு . அதில் வாழும் பொதுவான ஜனங்களை தேவன் நேசித்தார். இரட்சிக்கப்படாத ஜனங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணம், கொள்கைகள், விதிமுறை, ஒழுங்குகள், நல்லொழுக்கங்கள் வகுக்கப்பட்டு கர்த்தரை தேடும்படியாக நியமிக்கப்பட்டது. பின்பு கிறிஸ்து இயேசு தம் சீஷர்களுக்காய் ஜெபித்தபோது அவர்கள் உலகத்தார் அல்ல என்கிறார். உலகத்தின் கனத்தை ஏற்றுக்கொண்டு பின்பு தேவனுக்காய் நடப்பதும், வாழ்வதும் தேவனுக்கு உகந்ததல்ல. உண்மையாகவே கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தாரல்ல.


## உலகத்தால் பகைக்கப்படுதல்

இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் பொதுவாக உலகத்தால் பகைக்கப்படுவார்கள் என்று இயேசு கூறினார். நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களை பகைக்கும் (யோவான் 15 : 18 - 19) . உலகத்தாராகிய ஜனங்கள் பரிசுத்த பாதையையும் தேவனுக்காய் வாழ்வதையும் தெரிந்து கொள்ளாமல், தங்களுடைய சொந்த காரியங்களிலே அதிகம் அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள்.ஆகவே உலகத்தை நேசிக்கிற ஒருவரால் வேதாகமத்தின் அடிப்படையில் அழைக்கப்பட்ட பரிசுத்த வாழ்வை வாழ முடியாது .இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்த சட்டப்படி வாழ்ந்தார்கள். இரட்சிக்கப்படாத ஜனங்களை போல வாழவில்லை. உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை (1 யோவான் 3 : 1) .

## உலகத்தின் மேல் அன்பு கூராதீர்கள்

உலக காரியங்களையும் கிறிஸ்துவின் போதனைகளையும் ஒன்றாக்கி பரிசுத்தத்தை கெடுக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு பின்வரும் வசனம் அறிவுறுத்துவது யாதெனில் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதீர்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (1 யோவான் 2 : 15) .அநீதியான உலக ஆதாயத்துக்கும், கனத்துக்கும் உட்படாமல் பிரத்தியேகமாக கர்த்தருக்கே பிரியமாய் நடக்க வேண்டும். பெருமை, இச்சை, இவ்வுலக இன்பம், அசுத்தமான பாவ காரியங்களின் மேல் கொண்டுள்ள இச்சையினின்று விடுபட்டு தேவனுடைய பிள்ளைகள் தனித்துவமாய் பரிசுத்த வாழ்வு வாழ கடமைப்பட்டுள்ளோம். உலக அன்பும் தேவ அன்பும் என்றும் பொருந்தாது மாறுபாடானது.

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம்



**உலகின் மிகப் பெரும் சக்தி பொருட்களில் கூட இல்லை. ஆனால் அதன் சித்தாத்தங்கள் மற்றும் தத்துவங்களிலே அடங்கியிருக்கிறது.**

பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் (1 யோவான் 2 : 16). எது பிதாவினுடையது எது உலகத்தினுடையது என்பதை புரிந்து கொண்டீர்களா? மாம்ச இச்சையானது அசுத்தமும் சிற்றின்பமும் நிறைந்தது. அதாவது போதை வஸ்துக்கள், பெருந்தீனி, விபச்சாரம் இவர்களின் மீதான இச்சை அசுத்தமானது. ஆடை அணிவதில் உள்ள ஒழுங்கும் இந்த உலகத்தின்படி வேறு விதமானது ஆனால் வேதாகமம் கூறும் ஒழுங்கு வேறு. நம்மை நாம் அளவுக்கு அதிகமாக நகை, சிகை, முக அலங்கரிப்பு செய்து கொள்வதும் கூட மாம்ச இச்சை மற்றும் கண்களின் இச்சையை குறிக்கும். நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த அழகிய உடைகளுக்கு ஆசைப்படுவது, ஆடம்பர வீடுகள், சொகுசு கார்கள் மீதான விருப்பம் இவையெல்லாம் உலகத்தாருடையது .ஜீவனத்தின் பெருமை என்பது ஒரு மனிதன் கனத்தையும் அங்கீகாரத்தையும் சுதந்தரிக்க தற்பொழிவை நாடுவதில் அடங்கும். உலக சம்பத்து, செல்வம், பாராட்டுகள் யாவும் உலக சம்பந்தமானது. நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ 3 : 1-2).

## இப்பிரபஞ்சத்தின் ஞானமும் வல்லமையும்

2 கொரி 4 : 4 கூறுகிறது இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான். உலகத்தின் மீதான ஈர்ப்பு அதிகமாக காணப்படுகிறது. உலக இன்பங்களோடு திளைக்கிற அநேக தேவ பிள்ளைகள் தேவ அன்பை இழந்து போக காரணம், உலகத்தை அவர்களால் மேற்கொள்ள முடியாமல் போவதேயாகும் . விளையாட்டு, பொழுதுபோக்கு, நாகரீகம் இவையாவும் இப்பிரபஞ்சத்தின் தேவனாய் தாங்கள் வணங்கும் தெய்வத்தினுடையது . அவர்களுடைய அன்பு, நேரம், பணம் இவைகளை அவரவருடைய இஷ்ட தெய்வத்திற்கு செலவிடுகிறார்கள். உலக பொருளைக் காட்டிலும் அதிக வல்லமை யுடையதாய் பல சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் எண்ணுகிறார்கள். லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல (கொலோ 2 : 8 ). தேவ பிள்ளைகள் விழிப்பாய் இருக்க வேண்டும். மெல்ல மெல்ல அனுதின பரிசுத்த வாழ்வை கெடுக்கும் காரியங்களும், எண்ணங்களும் நம்மை அதிகாரம் செய்து விடாதபடிக்கு எச்சரிக்கையாய் வாழ்வோம். பாரம்பரியமான செயல்களாலும், உலக இன்பங்களினாலும் நம் பரிசுத்த வாழ்வு பாழாக்கப்பட்டு போய்விடக் கூடாது. இரட்சிக்கப்படாத சில போதனை யாளர்களும், அறிவுரையாளர்களும் நம்முடைய இந்த காலங்களில் புகுந்து அறிவார்ந்த தலைசிறந்த சிந்தனைகளை தூண்டும் விதமாய் உயர்ந்த ஞானத்தோடு போதிப்பதாக கருதி, அற்பமான உலக ஆசைகளை நம்முடைய மனதில் விதைப்பது எவ்வளவேனும் தேவனுக்கேற்ற உபதேசமாக இருக்க முடியாது.அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எச்சரித்து எழுதியதாவது : 1 கொரி 3 : 19 இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாய் இருக்கிறது (1 கொரி 1 : 18 - 25) . சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டு போகிறவர்களுக்கு பைத்தியமாய் இருக்கிறது மேலும் தேவனுடைய பைத்தியம் எனப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிகமாயிருக்கிறது. நீங்கள் யாருடைய வழிகாட்டுதலின்படி நடக்கப் போகிறீர்கள் விழிப்பாயிருங்கள்.

## எச்சரிக்கைகள்

உலகத்தானல்லதவனாய் இவ்வுலகில் வாழும்போது நாம் கருத்தில் கொள்ள வேண்டியது யாதெனில் தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் தன்னை சேவகம் எழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள மாட்டான் (2 தீமோ 2 : 4). சமூக, அரசியல் காரணங்களும் இதில் அடங்கும். லௌகீக ஆவி நல்லவிதமாக ஆரம்பித்து கசப்பான முடிவை தந்து பரிசுத்தத்தை கெடுத்துவிடும். ரோமாபுரியில் உள்ள தேவனுடைய சபைக்கு எழுதும்போது; பரிபூரணமான தேவனுடைய சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12 : 1 - 2) . பல இதயங்கள் இன்று உலக நோக்கம், தோற்றம் இவற்றினின்று மறுரூபமாக்கப்பட வேண்டியுள்ளது. யாக்கோபு 4: 4 சொல்கிறது உலகத்திற்கு சினேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னை காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாய் இருக்கிறது (யாக் 1 : 27). ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்டோரே விழிப்படைந்து, பரிசுத்தத்தின் மகிமையை அனுபவியுங்கள். இதை வாசிக்கும் உங்களை நீங்களே சோதித்து உணருங்கள். உங்கள் வாழ்வை தேவனுக்கு நேராக திருப்புங்கள். தேவனுக்கு முன்பாக கறைபடாத சுத்த இருதயத்தோடு கிறிஸ்து உலகத்தாரல்லாதது போல நானும் உலகத்தானல்ல, உலகத்தில் இருந்து வேறுபட்டவர்கள். உலகத்திலிருந்து வேறுபட்டு ஜீவிக்க விரும்புகிறீர்களா? உங்கள் குடும்பம், நண்பர்கள் யாவரும் தேவனோடு நிற்கிறீர்களா? உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன (மத் 16 : 24 - 26) . இந்த உலகம் சீக்கிரத்தில் கடந்து போகும். இந்த உலகத்தை பின்பற்றினோர் நித்திய ஆக்கினைக்குள்ளான மரணத்தில் பங்கடைவார்கள். ஆனால் தேவ பிள்ளைகளுக்கு நித்தியஜீவ வாழ்வு காத்திருக்கிறது.



# பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டவர்கள்

நம்மை சிருஷ்டித்த தேவனுக்காய் பரிசுத்த வாழ்க்கை வாழ்வதே பரிபூரணமான தேவசித்தம். சிருஷ்டிப்பின் நாயகராம் நம் கர்த்தரை மகிழச் செய்வது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் பேரானந்தமே. நாம் பயணிக்க பல பாதைகள் நம் கண்முன் இருந்தாலும் நித்திய வாழ்வை தரும் வழி ஒன்றே. ஆம் அது குறுகலான வழி. அதைக் கண்டடைகிறவர்கள் சிலர். அதுவே சிறந்த வழி. உண்மையான சமாதானத்தை தரும் பரிசுத்த பாதை அது . நம் தேவன் பரிசுத்தர். ஆகையால் நம்முடைய பரிசுத்த வாழ்வு மூலமாகத்தான் அவரைக் காண கூடும். உலகத்துக்கு இசைந்து வாழும் பலர் . ஆனால் நற்குணங்களை உடையோர் பரிசுத்த தேவனை காணமுடியாது. அதாவது பலவிதமான வார்த்தைகளை ஒன்றிணைத்து இசைத்துப் பாடி தேவனை ஆராதிக்கும் பலரும் பரிசுத்தமில்லாமையால் தேவனை தரிசிக்க முடியாது

ஆதியிலே தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த போது, அவரைத் தொழுது கொள்ளும் ஜனங்களைத் தமக்கென்று பிரித்தெடுக்கவே எண்ணினார். கிறிஸ்துவின் மையப் போதனையே பரிசுத்தம். அழிந்து போகும் உலகில் தேவ மகிமையை எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்பதே அவர். தம்முடைய சீஷர்களுக்கு போதித்தது .உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றி லேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே (1 பேதுரு 1 : 15 - 16) . பரிசுத்தத்திற்கு என்று அழைக்கப்பட்ட நாம் பரிசுத்தமில்லாமல் தேவனை தொழுது கொள்ள முடியாது. கிறிஸ்து இயேசுவின் மூலமாகத்தான் உண்மையாய் பரிசுத்தத்தை பெற்றுக்கொண்டு தேவனுக்கு பிரியமாய் நம் வழிகளை அமைத்துக்கொள்ள முடியும் .வாழ்வில் எல்லா தருணங்களிலும் பரிசுத்தம் தேவை. பரிசுத்தம் என்பது முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வதையும் குறிக்கும்.

உள்ளார்ந்த மனம் புதிதாக்கப்பட வேண்டும். 1 கொரி 6 : 20 சொல்கிறது, கிரயத்திற்கு கொள்ளப்பட்டீர்களே

ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள். அதாவது நாம் அணியும் உடை, பேசும் வார்த்தைகள், நம் எண்ணங்கள், நம்முடைய பழக்க வழக்கங்கள் மூலமாக தேவ நாமம் மகிமைப்படுவதற்கேதுவாக நடந்து கொள்ள வேண்டும்.அனுதினமும் நம் வழிகளெல்லாம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

எதிரியான பிசாசானவன் பரிசுத்தத்தை கெடுக்கும் விதத்தில் செயல்படுவான். பரிசுத்த ஜீவியத்தில் உங்களால் இதை செய்ய முடியாது. சுதந்திரமாக வாழ முடியாது. நீங்கள் எல்லாவற்றையும் ரசிக்க முடியாது என்று ஏராளமான உலக காரியங்களை கவனம் செலுத்த செய்வான். எதிரியான பிசாசானவன் பரிசுத்தமாய் வாழ்வதிலும் நாம் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழக்கூடும். அதிகாரம் செய்யும் ஜனங்கள் மத்தியில் நாம் தனித்துவமாய் திகழ கூடும். உண்மையான இரட்சிப்பும், பரிசுத்த வாழ்வும் பயத்தை புறம்பே தள்ளும். பொறாமை, சண்டை, கோபங்களி னின்று விடுதலை கிடைக்கும். பரிசுத்தம் என்பது உலகத்தை வெறுத்து, கிறிஸ்துவை சேவிக்க நம்மை வழி நடத்தும் .

பரிசுத்த வாழ்க்கை என்பது உயரிய அழைப்பு நம்மை சுற்றி வாழும் ஜனங்களுக்கு மத்தியில் நம்முடைய உயரிய அழைப்பு பரிசுத்தம், தைரியத்தையும், மன வலிமையையும் தரும் பரிசுத்தத்தின் உயரிய பரிசு நித்திய வாழ்வு. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபி 12 : 14) .

**உள்ளார்ந்த இதயத்தினாலும், மாம்சீக கிரியையினாலும் தேவனுக்குப் பிரியமாய் ஒரே ஆவியை உடையவர்களாய் வாழ்வோம்.**

**தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.**

1 தெச 4 : 7

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**


உங்களுக்குத் தெரியுமா?

கிறிஸ்துவின் காலங்கள் 210 ஆவது ஆண்டில் டெர்டுலியன் குறிப்புகள் : புறஜாதி ஜனங்களினின்று நீங்கள் வேறுபட்டவர்களாயிருப்பதினால் தான் நீங்கள் கிறிஸ்தவர்கள் .அவருடைய நோக்கத்தை அவருக்கே திருப்பி செலுத்துங்கள். அவர் உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. உங்களுக்கு கண் இருக்கும்போது ஏன் குருடனான வழிகாட்டியை நாடவேண்டும்? அவலட்சணமான ஒருவனால் நாம் உடுத்தப்படலாமா ? கிறிஸ்துவில் நீங்கள் நிலை கொண்டு இருக்கிறீர்களா?

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## நீதியை பிரசங்கித்தவன்

பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல் நீதியை பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டு பேரை காப்பாற்றி, அவ பக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப் பண்ணி;
– 2 பேது 2 : 5



உண்மையாய் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து கர்த்தர் சொன்ன விதமாய் நோவா பேழையை கட்டினார். தேவனுடைய நியாயத்தீர்ப்பிலே அக்கிரமக்காரர் யாவும் அழிந்து போகும் படியாக வரவழைக்கப்பட்ட ஜலப்பிரளயத்தினின்று மீட்கும் அடையாளமாக பேழை விளங்கியது. நோவாவின் நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் நோவாவின் செய்கைகளைக் கண்டு ஏளனம் செய்த போதும், நோவா சமுதாயத்தின் ஏளனங்களை கண்டு துளியேனும் பயப்படாமல் தேவன் தனக்கு சொன்னதை தைரியமாய் செய்துமுடித்தார். அவர் தனி ஒருவராக நின்று தேவனுடைய வார்த்தை சத்தியம் என்று நம்பினார் .

விசுவாசத்தினாலே நோவா தற்காலத்தில் காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்பு பெற்று பக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டு பண்ணினான்... விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்கு சுதந்திரவாளியானான் (எபி 11 : 7).
ஆதி 6: 9 சொல்கிறது நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாய் இருந்தான். நோவா தான் விசுவாசத்தினால் நீதியை பிரசங்கித்தவனானான். தேவனுடைய நீதியை தன் வாயினால் அறிக்கையிட்டு, கிரியையினால் போதித்து வந்தார். நோவா கர்த்தர் சொன்ன வேலையை மட்டும் செய்திருக்கலாம், ஆனால் அக்கிரமகாரராயிருந்த ஜனங்கள் வரும் அழிவினின்று காக்கப்படும்படியாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுமுன், மனந்திரும்பி ஒப்புக் கொடுக்கப்படும் படியாக நோவா நீதியை பிரசங்கித்து வந்தார்.
நாம் வாழும் இந்த நாட்களில் அக்கிரமக்காரர்களுக்கு நீதியை பிரசங்கிக்கும் போதகர்கள் தேவை. பாவத்தில் வாழும் ஜனங்கள் விடுவிக்கப் படாமலேயே, போதிக்கும் அநேக போதகர்கள் தான் இந்த நாட்களில் அதிகம். செய்வதற்கு இலகுவான காரியங்களையே அவர்கள் நாடுகிறார்கள்.
கர்த்தர் பரிசுத்தர். ஆகவே அவருடைய போதகர்களும் உலக இச்சையினின்று வேறு பிரிக்கப்பட்ட பரிசுத்தவான்களாயிருக்கவே அவர் விரும்புகிறார். பரிசுத்தமான தேவ ஊழியர்கள் பிறரால் அவமானமும், நிந்தையும் , பரிகாசமும், ஏளனமும், ஏன் உபத்திரவமும் அடைய நேரிடலாம். விசுவாச கூட்டத்தார் இதினிமித்தம் விலகிச்செல்ல கூட நேரிடலாம்.ஆயினும் நியாயத்தீர்ப்பிலே அவர்கள் விடுதலையாக்கப்பட முடியாததால், இப்போதே தப்பித்துப் பிழைத்துக் கொள்ளும்படியாக மனந்திரும்புவதற்கான தருணங்களை ஜனங்களுக்கு வழிகாட்டியாய் இருந்து பாடுபட வேண்டியது போதகர்களின் கடமை.
நோவாவின் காலம் நியாயத் தீர்ப்பின் கடைசி காலமாயிருந்து பரிசுத்தவான்கள் காப்பாற்றப்பட்டார்கள். அக்கிரமக்காரர் அனைவரும் நித்திய ஆக்கினையான மரணத்தை அடைந்தார்கள். ஒரு ஆத்துமா மரணத்தினின்று காக்கப்படும் பொருட்டு, எந்த ஒரு தயக்கமும் இன்றி தைரியமாய் பரிசுத்த ஆவியானவரை வெளிப்படுத்தும் வண்ணமாய் போதிக்கும் வரங்களை தேவன் தாமே தம்முடைய ஊழியக்காரருக்கு கொடுத்து, அவர்களை எடுத்து பயன்படுத்துவாராக.

CONTACT :-

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi-Taluk - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with us on Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316